முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2021-10-23
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் செவ்வைநிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது (OTQs தவிர்ந்த). பரீட்சார்த்திகள் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றுக்கு எதிரே நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** கிரயக் கணக்கீடு தொடர்பில் கீழ்வருவனவற்றில் சரியான கூற்று எது?

(1) இது வரலாற்று நிகழ்வுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் அடிப்படையாகக் கொண்டது.

(2) இது அலகொன்றின் கிரயத்தைத் தீர்மானிக்கிறது.

(3) இது சட்டத் தேவைகளுக்கு இணங்க அறிக்கைகளைத் தயாரிக்கிறது.

(4) இது வெளித் தரப்பினருக்கு மாத்திரம் தகவல்களை வழங்குகிறது.

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வரும் நிகழ்வுகள் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் ஆனால் நிதிக் கூற்றுக்களை அங்கீகரிப்பதற்கு முன்னர் இடம்பெற்றவை ஆகும். LKAS – 10 அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, கீழ்வருவனவற்றுள் சீராக்கல் நிகழ்வு **அல்லாதது** எது?

(1) கம்பனியிடம் கடன் பெற்றிருந்த வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைதல்

(2) தீயினால் பெரிய உற்பத்திப் பொறியொன்று அழிவடைதல்

(3) அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் நிதிக் கூற்றுக்கள் பிழையானவை என்ற மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்படுதல்.

(4) நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட பெறுமதியைவிடக் குறைந்த பெறுமதியில் தொக்கின் ஒரு பகுதி விற்பனை செய்யப்படல்.

(02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் தகவல்கள் 2021 ஏப்ரல் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட மெக்ஸ் (தனியார்) கம்பனியின்** பதிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

| | |
|---|---|
| தொக்கு – 2021 ஏப்ரல் 01 இல் | ரூபா 170,000/- |
| தொக்கு – 2021 ஏப்ரல் 30 இல் | ரூபா 240,000/- |
| கொள்வனவுகள் | ரூபா 910,000/- |
| மொத்த இலாபம் | விற்பனையில் 40 % |

2021 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த மாதத்திற்கான விற்பனை :

(1) ரூபா 1,176,000/-. (2) ரூபா 2,210,000/-.

(3) ரூபா 1,800,000/-. (4) ரூபா 1,400,000/-. (02 புள்ளிகள்)

**1.4** **வரையறுக்கப்பட்ட ரோஸி கம்பனி** 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 3,600,000/- கிரயத்தில் மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. மோட்டார் வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருப்பதுடன் கம்பனியானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்விடுகிறது. 5 ஆவது ஆண்டின் இறுதியில் மோட்டார் வாகனத்தின் ஈற்றுப் பெறுமதி (residual value) ரூபா 100,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2021 மார்ச் 31 இல் மோட்டார் வாகனத்தின் முன்கொணரற் பெறுமதி (carrying value):

(1) ரூபா 1,500,000/-. (2) ரூபா 2,100,000/-.

(3) ரூபா 1,440,000/-. (4) ரூபா 2,160,000/-.

(02 புள்ளிகள்)

**1.5** கீழ்வரும் தகவல்களைக் கவனத்தில் கொள்க :

| | |
|---|---|
| **பொருள் X** இற்கான வருடாந்தக் கேள்வி | 20,000 அலகுகள் |
| கட்டளையொன்றின் கட்டளையிடல் கிரயம் | ரூபா 200/- |
| அலகொன்றின் வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம் | ரூபா 0.50 |

நீங்கள் கீழ்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.

$$EOQ = \sqrt{\frac{2DC_0}{C_h}}$$

**பொருள் X** இன் சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) :

(1) 3,800 அலகுகள் (2) 4,500 அலகுகள் (3) 4,000 அலகுகள் (4) 2,000 அலகுகள்

(02 புள்ளிகள்)

***1.6*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.6** இலங்கையில் பங்குடமை வணிகங்களுக்குப் பொருத்தமான இரண்டு (02) சட்டங்கள் / ஒழுங்கு விதிகளை நிரற்படுத்துக. (02 புள்ளிகள்)

**1.7** ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமையொன்றின் இரண்டு (02) அனுகூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.8** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில், கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் காணப்படுகின்ற ஏற்பாடுகளைக் குறிப்பிடுக :

(i) பங்குதாரர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை

(ii) பணிப்பாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை (03 புள்ளிகள்)

**1.9** கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட XYZ (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன:

| | |
|---|---|
| நாளொன்றுக்கான சாதாரண வேலை மணித்தியாலங்கள் | 8 மணித்தியாலங்கள் |
| மணித்தியாலமொன்றுக்கான அடிப்படைக் கூலி வீதம் | ரூபா 300/- |
| ஒரு (1) அலகை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள நியம காலம் | 5 நிமிடங்கள் |
| உபகாரக் கொடுப்பனவு (Bonus) | அடிப்படைக் கூலி வீதத்தில் சேமிக்கப்படும் காலத்தின் 75% |

ஊழியர் ஒருவர் கடந்த மாதத்தில் 2,040 அலகுகளை உற்பத்தி செய்துள்ளதுடன் அவர் கடந்த மாதத்தில் 20 நாள்கள் வேலை செய்துள்ளார்.

இந்த ஊழியரின் கடந்த மாத மொத்தச் சம்பாத்தியத்தைக் (total earnings) கணிக்குக. (04 புள்ளிகள்)

**1.10** கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ரோய் (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனை | 5,400,000 |
| VAT பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருள்கள் | 2,160,000 |
| VAT பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தான ஏனைய கொள்வனவுகள் | 324,000 |

- சகல பெறுமானங்களும் பெறுமதிசேர் வரி (VAT) தவிர்ந்த பெறுமானங்களாக இருப்பதுடன் பெறுமதி சேர் வரி வீதம் 8% ஆகும்.
- 2021 சனவரி 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு (Credit) மீதி ரூபா 48,000/- ஆகும்.

VAT கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

கீழ்வரும் தகவல்கள் **நிசலா** என்பவருக்குச் சொந்தமான ஒரு சில்லறைக் கடையான **நிசலா டிரேடர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு: *(ரூபா'000)*

| | **2021 மார்ச் 31 இல்** | **2020 ஏப்ரல் 01 இல்** |
|---|---:|---:|
| காணியும் கட்டடமும் - முன்கொணரற் பெறுமதியில் | 10,800 | 11,250 |
| மோட்டார் வாகனங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 16,650 | 15,750 |
| தொக்கு | 5,400 | 5,625 |
| வியாபார வருமதிகள் | 6,075 | 6,300 |
| வங்கி மீதி | ? | 2,925 |
| வங்கிக் கடன் | 1,000 | - |
| வியாபார சென்மதிகள் | 3,040 | 3,600 |
| அட்டுறு மின்சாரம் | 380 | 495 |

(2) **நிசலா** முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை. 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலான அவரது வங்கிக் கூற்றுக்களிலிருந்து கீழ்வரும் பொழிப்பாக்கப் பட்ட தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---:|
| **வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசு :** | |
| காசு விற்பனைகள் | 7,875,000 |
| வியாபார வருமதிகளிலிருந்தான பெறுவனவுகள் | 5,625,000 |
| வங்கிக் கடன் | 1,000,000 |
| **காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்:** | |
| காசுக் கொள்வனவுகள் | 2,812,500 |
| வியாபார சென்மதியாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 3,375,000 |
| மின்சாரம் | 562,500 |
| அலுவலகப் பராமரிப்பு | 630,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 3,892,500 |
| மோட்டார் வாகனமொன்றின் கொள்வனவு (31.03.2021 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 2,250,000 |

(3) **நிசலா** சகல காசுப் பெறுவனவுகளையும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்திருந்ததுடன் அனைத்துக் கொடுப்பனவுகளையும் காசோலைகள் ஊடாக மாத்திரமே மேற்கொண்டிருந்தார்.

(4) வங்கிக் கடன் ரூபா 1,000,000/- ஆனது 2021 மார்ச் 01 இல் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக 9% என்ற வருடாந்த வட்டி வீதத்தில் வட்டி செலுத்தப்படுவதுடன் கடனின் 1 ஆவது தவணைக் கொடுப்பனவு 2021 ஏப்ரல் 01 இல் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் **நிசலா டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

**தமித்** மற்றும் **உதித்** ஆகியோர் முறையே 2:1 என்ற விகிதத்தில் இலாப, நட்டங்களை பகிரும் வகையில் **DU பெஷன்** என்ற பங்குடமையை நடத்திச் செல்கின்றனர். 2020 சனவரி 01 இல், **மீனா** என்பவர் ரூபா 8,000,000/- இனை ஆரம்ப காசு முதலீடாக இட்டு, இந்தப் பங்குடமையில் ஒரு புதிய பங்காளராக இணைந்து கொண்டார்.

(1) கீழ்வரும் மீதிகள் பங்குடமையின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| 2020 சனவரி 01 இல் மூலதனக் கணக்கு : | | |
| **தமித்** | | 12,000 |
| **உதித்** | | 8,000 |
| 2020 சனவரி 01 இல் **மீனா** உட்படுத்திய மூலதனம் | | 8,000 |
| 2020 சனவரி 01 இல் நடைமுறைக் கணக்குகள் : | | |
| **தமித்** | | 1,500 |
| **உதித்** | 800 | |
| 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியிலான எடுப்பனவுகள் : | | |
| **தமித்** | 900 | |

(2) 2020 சனவரி 01 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 2,400,000/- ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன், இதனை, நன்மதிப்புக் கணக்கைப் பேணாது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(3) பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் 2020 சனவரி 01 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன : *(ரூபா '000)*

| | **2020 சனவரி 01 இல் மீள்மதிப்பிடப்பட்ட தொகை** | **கிரயம்** | **2020 சனவரி 01 இல் திரண்ட தேய்மானம்** |
|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 6,000 | 4,000 | 600 |
| மோட்டார் வாகனங்கள் | 1,400 | 2,000 | 1,000 |

நடைமுறையல்லாச் சொத்துக்களை பங்குடமைக் கணக்குகளில், மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் முன்கொண்டு செல்ல இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

(4) புதிய பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றை வழங்குகிறது :

- 2020 சனவரி 01 இலுள்ள மூலதனக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டிற்கு 10% இல் மூலதனம் மீதான வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- **உதித்** மாதாந்தச் சம்பளமாக ரூபா 40,000/- இனைப் பெற உரித்துடையவர் ஆவார்.
- **தமித், உதித், மீனா** ஆகியோரிடையே முறையே 4 : 3 : 3 என்ற விகிதத்தில் இலாபங்களும் நட்டங்களும் பகிரப்பட வேண்டும்.

(5) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 6,480,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் தகவல்கள் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **கிறீன் கோல்ப் கழகத்தின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **கிறீன் கோல்ப் கழகத்தின்** கொள்ளல் மற்றும் கொடுத்தல் (receipts and payments) கணக்கு கீழே தரப்பட்டுள்ளது :

**கொள்ளல்** மற்றும் **கொடுத்தல் கணக்கு** *(ரூபா '000)*

| | | | |
|---|---:|---|---:|
| மீதி – 01.01.2020 இல் மு.கொ.வ. | 15,300 | தொலைபேசிச் செலவுகள் | 1,010 |
| நன்கொடைகள் | 1,575 | மின்சாரம் | 3,150 |
| அங்கத்துவச் சந்தா | 20,025 | பயிற்சியளித்தல் கட்டணம் | 4,725 |
| உணவுச்சாலை விற்பனைகள் | 60,000 | ஏனைய நிருவாகச் செலவுகள் | 2,250 |
| | | உணவுச்சாலை வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | 38,700 |
| | | விளையாட்டு உபகரணங்கள் | 5,250 |
| | | மீதி 31.12.2020 இல் கீ.கொ.செ. | 41,815 |
| | **96,900** | | **96,900** |

(2) கழகத்தின் ஏனைய சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு : *(ரூபா '000)*

| | **2020 டிசெம்பர் 31 இல்** | **2020 சனவரி 01 இல்** |
|---|---:|---:|
| காணியும் கட்டடமும் - முன்கொணரற் பெறுமதியில் | 100,000 | 120,000 |
| விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 26,250 | 24,000 |
| தொக்கு | 10,500 | 7,500 |
| அங்கத்துவச் சந்தா நிலுவைகள் | 900 | 1,350 |
| முன்னரே செலுத்தப்பட்ட அங்கத்துவச் சந்தா | 675 | 450 |
| உணவுச்சாலை வழங்குநர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 18,000 | 12,000 |

(3) நன்கொடைகள், ஆண்டிற்கான வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(4) விளையாட்டு உபகரணங்களின் கொள்வனவுகளைத் தவிர, ஆண்டின் காலப்பகுதியில் கழகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு வேறெந்தச் சேர்ப்பனவுகளோ, அகற்றல்களோ இல்லை.

(5) மின்சாரச் செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கும் $\left[\frac{1}{3}\right]$ ஏனைய நிருவாகச் செலவினங்களில் ரூபா 1,125,000/- உம் உணவுச்சாலைச் செயற்பாட்டின் கீழ் கணக்கிடப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **கிறீன் கோல்ப் கழகத்திற்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) உணவுச்சாலை வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **PQ ஆடைத்தொழிற்சாலை** ஆனது ரிசேட் ஒன்று ரூபா 750/- விலையில் 1,000 ரீசேட்டுகளை வழங்குவதற்கான கட்டளை ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தக் கட்டளை தொடர்பிலான கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) ரீசேட் ஒன்றிற்கு 0.45 மீற்றர் துணி தேவைப்படுவதுடன் அந்தத் துணியை மீற்றர் ஒன்று ரூபா 700/- விலையில் வாங்க முடியும்.

(2) ரீசேட் ஒன்றை பொதி செய்வதற்கான கிரயம் ரூபா 25/- ஆகும்.

(3) மணித்தியாலம் ஒன்றுக்கான நேர் கூலிக் கிரயம் ரூபா 200/- ஆகும். ஒரு ரீசேட்டைத் தயாரிப்பதற்கு 0.5 நேர் கூலி மணித்தியாலம் தேவைப்படுகிறது.

(4) ரீசேட் ஒன்றின் உற்பத்தி மேந்தலையானது நேர் கூலிக் கிரயத்தின் 50 % ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ரீசேட் ஒன்றிற்கான கிரயத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இந்தக் கட்டளை மூலமான இலாபம் அல்லது நட்டத்தைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட திலங்கா (தனியார்) கம்பனி** ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை ஒன்றைச் செயற்படுத்துகிறது.

கீழ்வரும் தகவல்கள் 2021 மே மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட திலங்கா (தனியார்) கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2021 மே 01 இலான இருப்பு மதிப்பீடு பின்வருமாறு : *(ரூபா)*

| | **2021 மே 01 இல்** |
|---|---|
| மூலப்பொருள் | 42,000 |
| புத்துருவாகும் வேலை (WIP) | 32,000 |

(2) 2021 மே மாதத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் (கொடுக்கல், வாங்கல்கள்) இடம்பெற்றன :

| | **ரூபா** |
|---|---|
| கடன் அடிப்படையிலான மூலப் பொருள்களின் கொள்வனவு | 325,000 |
| உற்பத்திக்கு வழங்கப்பட்ட மூலப் பொருள்கள் | 275,000 |
| உற்பத்தி மீது செலுத்தப்பட்ட நேர் கூலிகள் | 120,000 |
| உற்பத்தி மேந்தலைக் கிரயம் | 145,000 |
| முடிவுப் பொருள்களின் உற்பத்திக் கிரயம் | 545,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மூலப் பொருள் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) புத்துருவாகும் வேலை (WIP) கட்டுப்பாட்டுக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

தானியங்கி மோட்டார் வாகனங்களுக்கான திருட்டு எதிர்ப்பு சாதனத்தைத் (antitheft device) தயாரிக்கின்ற **வரையறுக்கப்பட்ட டெக்னோ லங்கா (தனியார்) கம்பனியானது** இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (தயாரிப்பு மற்றும் பொதியிடல்) ஒரு சேவைப் பிரிவையும் (தொழில்நுட்பம்) கொண்டிருக்கிறது.

(1) கம்பனி அதன் வருடாந்த உற்பத்தி மேந்தலையை ரூபா 18,000,000/- என மதிப்பீடு செய்துள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு :

| கிரய உருப்படி | கிரயம் (ரூபா) |
|---|---|
| இயந்திரத் தேய்மானம் | 6,500,000 |
| தொழிற்சாலை வாடகை | 4,800,000 |
| தரப் பரிசோதனைக் கிரயம் | 1,500,000 |
| மின்சாரம் | 5,200,000 |
| **மொத்த உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள்** | **18,000,000** |

(2) சாதனம் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட நேர் கிரயம் பின்வருமாறு :

| அலகொன்றிற்கு | ரூபா |
|---|---|
| நேர் பொருள் | 1,500 |
| நேர் கூலி | 2,100 |
| **முதன்மைக் கிரயம்** | **3,600** |

(3) மேந்தலையின் பகிர்வு அடிப்படைகள் கீழே தரப்பட்டுள்ளன :

| அடிப்படை | உற்பத்திப் பிரிவு | | சேவைப் பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | தயாரிப்பு | பொதியிடல் | தொழில்நுட்பம் | |
| இயந்திர மணித்தியாலங்கள் | 12,000 | 8,000 | 5,000 | 25,000 |
| தரைப் பரப்பு (சதுர அடி) | 2,000 | 1,500 | 1,500 | 5,000 |
| மின்சாரம் (கிலோவாற்று) | 15,000 | 8,000 | 2,000 | 25,000 |
| தரப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 8 | 4 | - | 12 |
| நேர் கூலி மணித்தியாலங்கள் (மணித்.) | 10,000 | 8,000 | - | - |
| கிரயப் பகிர்வு – தொழில்நுட்பம் | 65% | 35% | - | - |
| அலகொன்றிற்கான நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை | 1.5 | 2 | - | - |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) உற்பத்திப் பிரிவுகளுக்கு மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டு பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் ஒரு கூற்றினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) நேர் கூலி மணித்தியாலங்களின் அடிப்படையில், தயாரிப்பு மற்றும் பொதியிடல் பிரிவுகளுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதங்களைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(c) திருட்டு எதிர்ப்பு சாதனம் ஒன்றின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2021 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட நீம் சோன் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது:

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 10,000 |
| கைக்கொள் இலாபம் – 2020 ஏப்ரல் 01 இல் | | 7,834 |
| பொது ஒதுக்கம் – 2020 ஏப்ரல் 01 இல் | | 3,200 |
| பொறி மற்றும் உபகரணம் – கிரயத்தில் : | | |
| மோட்டார் வாகனங்கள் | 25,000 | |
| இயந்திரம் | 22,500 | |
| அலுவலக உபகரணம் | 1,500 | |
| 2020 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் : | | |
| மோட்டார் வாகனங்கள் | | 13,125 |
| இயந்திரம் | | 3,000 |
| அலுவலக உபகரணம் | | 300 |
| 2021 மார்ச் 31 இல் தொக்கு | 1,050 | |
| வியாபார வருமதிகள் | 2,870 | |
| வியாபார சென்மதிகள் | | 1,873 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 1,057 | |
| 14 % தனிச்சங்கள் | | 5,000 |
| விற்பனைகள் | | 31,520 |
| விற்பனைக் கிரயம் | 15,391 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,800 | |
| மின்சாரம் | 400 | |
| அலுவலக வாடகை | 600 | |
| தொலைபேசி | 900 | |
| அலுவலகப் பராமரிப்பு | 250 | |
| விளம்பரப்படுத்தல் | 800 | |
| விற்பனை அணியினருக்கான விற்பனைப் பணிசை (தரகு) | 1,025 | |
| செலுத்தப்பட்ட தனிச்ச வட்டி | 350 | |
| ஏனைய நிதிச் செலவுகள் | 29 | |
| 2020/21 ஆம் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் | 330 | |
| | **75,852** | **75,852** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் தொக்கின் நிகரத் தேறுகைப் பெறுமதி (NRV) ரூபா 950,000/- ஆக இருந்தது.

(2) 2020 ஏப்ரல் 01 இல், ஒவ்வொன்றும் ரூபா 100/- பெறுமதியான 14% தனிச்சங்கள் 50,000 இனை கம்பனி விநியோகித்தது. வட்டியானது ஆண்டிற்கு இரு முறை செலுத்தப்பட வேண்டும்.

(3) ரூபா 3 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனமொன்று 2021 சனவரி 01 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகியது. இந்த மோட்டார் வாகனம் 2017 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்டதாகும். விபத்து காரணமாக இவ்வாகனம் முற்றாகச் சேதமடைந்திருந்ததுடன் காப்புறுதிக் கம்பனி, மோட்டார் வாகனத்தின் கிரயத்தில் 80% இனை காப்புறுதி இழப்பீடாக வழங்குவதற்கு 2021 மார்ச் 31 இல் இணங்கம் தெரிவித்திருந்தது. இது தொடர்பில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(4) பொறி மற்றும் உபகரணம் (PE) கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு உள்ளன:

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| இயந்திரம் | 08 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுகள் |

(5) கீழ்வரும் அட்டுறு மற்றும் முற்கொடுப்பனவுச் செலவினங்கள் 2021 மார்ச் 31 இல் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

| | **ரூபா** |
|---|---:|
| விளம்பரப்படுத்தல் முற்கொடுப்பனவு | 8,000 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 70,000 |

(6) கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, சில வாடிக்கையாளர்களின் கொடுப்பனவு மீதான நம்பகத்தன்மை தொடர்பில் சந்தேகம் காணப்படுகிறது. இதனால் பணிப்பாளர் சபை 2021 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 10% ஐயுறவுக்கடன் ஏற்பாட்டைச் செய்யத் தீர்மானித்திருக்கிறது.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2021 மே 31 இல் பணிப்பாளர் சபையினால் அதிகாரம் அளிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

முகாமையின் பயன்பாட்டிற்காக **வரையறுக்கப்பட்ட நீம் சோன் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (13 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |